## ‘சோபா மாடல் அரசு’ என்ன கொள்முதல் செய்கிறதோ இல்லையோ –

# அடுத்த கட்சி எம்.எல்.ஏ.களை - கட்சியினரை கொள்முதல் செய்யும் த.வெ.க. அரசு!

## ஆற்காட்டார் இல்ல மணவிழாவில் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சாடல்!

**‘சென்னை, ஜூன் 18–**

**கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மணவிழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

“கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறுகின்ற, ஐயா ஆற்காட்டார் அவர்களின் இல்லத் திருமண விழாவில், கலந்துகொண்டுள்ள உங்கள் அனைவரையும் வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

கழகத்தின் உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஐயா ஆற்காடு வீராசாமி அவர்களின் பேரனும், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் டாக்டர் கலாநிதி வீராசாமி - டாக்டர் ஜெயந்தி கலாநிதி அவர்களின் மகனுமான சகோதரர் வி.கே.சித்தார்த்-அஷ்ரயா காயத்ரி இணையர்கள் இன்று திருமண வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கிறார்கள்.



### வரவேற்கும் வாய்ப்பு

மணமக்களுக்கு உங்களின் அத்தனை பேர் சார்பாக. முதலில் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திருமண விழா நிகழ்ச்சியில் கழகத்தின் இளைஞர் அணி செயலாளராகவோ, தமிழ்நாட்டின் எதிர்க்கட்சி தலைவராகவோ நான் பங்கேற்கவில்லை. ஐயா ஆற்காட்டார் அவர்களின் குடும்பத்தில் ஒருவனாகத்தான் உங்களையெல்லாம் வரவேற்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், ஐயா ஆற்காட்டார் அவர்களுக்கும் இருக்கக்கூடிய நட்பைப் பற்றி உங்கள் அனைவருக்கும் தெரியும். ஐயா ஆற்காட்டார் அவர்கள், கலைஞரின் நிழலாக வலம் வந்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் அதிக நேரம் பேசக்கூடியவர், பழகுகின்ற வாய்ப்பைப் பெற்றவர். நாங்கள் எல்லாம் சின்ன வயதில் கோபாலபுரம் வீட்டில் இருக்கும் போது, தினமும் அவர்களைப் பார்ப்போம். காலை 8:00 மணிக்கு தலைவருடன் வந்து பேச ஆரம்பித்தார் என்றால், இரவு 10:00 மணி வரைக்கும் தலைவருடன் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டவர்தான் ஐயா ஆற்காட்டார் அவர்கள்.

### துணையாக இருந்தவர்

அது மட்டுமல்ல, நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் ஒரு வருட காலம் மிசாவில், சிறையில் இருந்தபோது, அவருக்கும் துணையாக இருந்தவர்தான் ஐயா ஆற்காட்டார் அவர்கள். இன்று எந்த கட்சி ஆட்சிக்கு வருகிறதோ, அந்தக் கட்சியின் கரை வேட்டியைக் கட்டிக்கொண்டு சுற்றுகின்ற ஆட்களையெல்லாம், நாம் அதிகமாக பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதிலேயும் இன்று தமிழ்நாட்டில் இந்த `சோபா மாடல் ஆட்சி’ வந்தபிறகு, அதை கொஞ்சம் அதிகமாகவே நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

இந்த அரசு எதை கொள்முதல் செய்கிறதோ இல்லையோ, அடுத்த கட்சி ஆட்களையும், அடுத்த கட்சி சட்டமன்ற உறுப்பினர்களையும் தொடர்ச்சியாக இந்த அரசு கொள்முதல் செய்துகொண்டு வருகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு மத்தியில், இன்று ஒரே கொடி, ஒரே இயக்கம், ஒரே லட்சியம் என்று ஐயா ஆற்காட்டார் அவர்கள் இன்றைக்கும் பயணம் செய்து கொண்டிருக்கிறார். கொண்ட கொள்கையில் தடம் மாறாமல் பயணிக்கக் கூடிய இன்றைய தலைமுறைக்கு ஐயா ஆற்காட்டார் அவர்கள் ஒரு வழி காட்டியாக செயல்பட்டு வருகிறார்.

அவர் வழியில் நம் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களும், இன்று கழகத்தின் குரலாக பாராளுமன்றத்தில் தொடர்ந்து எதிரொலித்துக் கொண்டிருக்கிறார்.

### தயங்கியது கிடையாது

கலாநிதி வீராசாமி அவர்கள் வெளியே பார்ப்பதற்கு மிகவும் சாஃப்டாகத் தெரிவார். ஆனால், நாடாளுமன்றத்திற்குச் சென்றால், அங்கு பேச வேண்டிய கருத்துக்களை சரியான நேரத்தில் சரியாகப் பேசி தன்னுடைய கருத்துகளைப் பதிய வைப்பார். குறிப்பாக, தமிழ்நாட்டின் உரிமை சார்ந்த விஷயங்களைப் பேசுவதற்கு அவர் என்றைக்குமே தயங்கியது கிடையாது.

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்தபோது நமக்கு வாக்களிக்காத மக்கள் எல்லாம் இந்த ஆட்சிக்கு வாக்களிக்காமல் தவறிவிட்டோமோ என்ற எண்ணத்தோடு இருந்தார்கள். ஆனால், இன்று இந்த `சோபா மாடல் அரசு’ அமைந்த பிறகு, `இப்படிப்பட்ட ஒரு மோசமான ஆட்சிக்கு நாம் ஓட்டு போட்டுவிட்டோமே’ என்று மக்கள் வருத்தப்பட ஆரம்பித்திருக்கிறார்கள்.

### சோபா மாடல் ஆட்சி

இந்த சோபா மாடல் ஆட்சியை, மக்கள் வீட்டுக்கு அனுப்ப வேண்டிய நாள் வெகு தொலைவில் இல்லை. தலைவர் அவர்கள் தலைமையில் மீண்டும் நம் கழக ஆட்சி நிச்சயம் அமையும். தமிழ்நாடு மீண்டும் வளர்ச்சிப் பாதையில் நடைபோடும் என்று சொல்லி மணமக்களுக்கு உங்கள் அனைவரின் வாழ்த்துகளையும் தெரிவித்து நம் இல்ல திருமணத்தை நடத்தி வைக்க வருகை தந்திருக்கக்கூடிய கழகத் தலைவர் அவர்களை வருக வருக என வரவேற்கிறேன்.

### மூத்த முன்னோடிகள்

வாழ்த்துரை வழங்க உள்ள கழகத்தின் பொருளாளர் டி.ஆர். பாலு அவர்களையும், முதன்மைச் செயலாளர் அண்ணன் கே.என். நேரு அவர்களையும், முன்னாள் முதலமைச்சர் ஓ.பி.எஸ் அவர்களையும், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ.ராசா அவர்களையும், கனிமொழி கருணாநிதி அவர்களையும், மாவட்டக் கழகச் செயலாளர்கள் எ.வ.வேலு அவர்களையும், மா. சுப்பிரமணியன் அவர்களையும், அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களையும், மாதவரம் சுதர்சனம் அவர்களையும் வந்திருக்கக்கூடிய அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்களையும், அனைத்து முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களையும், கழகத்தின் அனைத்து நிர்வாகிகளையும், அனைத்து அணிகளின் நிர்வாகிகளையும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளையும், கழகத்தின் அனைத்து மூத்த முன்னோடிகளையும், மணமக்களின் உற்றார் உறவினர்களையும், நண்பர்களையும், முத்தமிழறிஞர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளான உங்கள் அத்தனை பேரையும் இந்த திருமண விழாவுக்கு வருக வருக என வரவேற்று அமர்கிறேன்.

நன்றி வணக்கம்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் மணவிழாவுக்கு வந்தவர்களை வரவேற்றுப் பேசினார்.

---

## அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கட்சித் தாவல்!

# த.வெ.க. அரசு தொடர்ந்து ஏமாற்றுமா?

## முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

*சென்னை, ஜூன். 18-*

*“அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் தொடர்ந்து கட்சித் தாவலை மேற்கொண்டு வருவது ஏன்? அவர்களுக்கு த.வெ.க.- அரசு அமைச்சர் பதவி அளிக்குமா? அல்லது ஏமாற்றுமா?” என்று சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-*



*அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து தங்களது பதவியை ராஜினாமா செய்து விட்டு ஆளுங்கட்சியான த.வெ.கவில் இணைவது தற்போது ஆட்சியில் இருக்கும் த.வெ.க அரசுக்கு ஆதரவு அளித்து வருகின்ற, காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், கம்யூனிஸ்டுகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் மீதுள்ள நம்பகத்தன்மையின்மையா? அல்லது அவர்களது தொடர்பை துண்டித்து விட்டு ஒன்றிய அரசிடம் தற்போது வைத்திருக்கின்ற மறைமுக உறவை வெளிப்படையாக உறுதிப்படுத்தப்படுவதற்காகவா?*

*அ.தி.மு.க.வின் 25 MLAக்கள் இந்த அரசை ஆதரித்து வாக்களிப்பதற்காக அவர்களில் 8 பேர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படும் என்று உறுதியளித்ததாக நம்பியவர்களுக்கு கொடுத்த வாக்குறுதி என்ன ஆனது? MLA பதவியை ராஜினாமா செய்து கொண்டு இருப்பது அமைச்சர் பதவிக்காகவா? எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்தவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கலாமே (ஆறு மாதத்திற்குள் தேர்தலில் நின்று MLA வாக தேர்ந்தெடுக்கப்பட்டால் போதுமானதே) தவெக அரசு அதை நிறைவேற்றுமா? அல்லது 25 MLAக்களையும் தொடர்ந்து ஏமாற்றுமா?*

*இவ்வாறு மு.அப்பாவு அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.*

---

## முன்னாள் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்- சி.வெ.கணேசன் தலைமை!

## வி.கே.வெங்கடராமன்- நா.பலராமன் வரவேற்புரை!

# பண்ருட்டி வடக்குப்பாளையம் கே.கணேசன் - மலர்விழி இல்ல மண விழா வரவேற்பு!

## செ.புஷ்பராஜ்- கே.ராமச்சந்திரன்- ஆர்.எஸ்.எம்.தணிகை செல்வம்- கே.ராஜேந்திரன் வாழ்த்து!

*கடலூர், ஜூன்.18,*

*கடலூர், பண்ருட்டி, வடக்குப்பாளையம் கிளைக் கழகச் செயலாளர் கே.கணேசன் - மலர்விழி ஆகியோரின் புதல்வர் ஜி.கமல்நாத்- ஏ. சரளா ஆகியோரின் மணவிழா இன்று(18.6.2026- வியாழக்கிழமை) காலை 7.30 மணிக்கு கடகர், திருவந்திபுரம், தேவநாத சுவாமி சன்னதியில் நடைபெறுகின்றது.*

*அதனைத் தொடர்ந்து மணவிழா வரவேற்பு இன்று(18.6.2026) மாலை6 மணிக்கு மேல் பட்டாம்பாக்கம், மெயின் ரோட்டில் அமைந்துள்ள சோலை சி.எஸ்.எம். திருமண மண்டபத்தில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகின்றது.*

*மண விழா வரவேற்பிற்கு முன்னாள் அமைச்சர்- கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மேற்கு மாவட்டச் செயலாளர்- முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர். அண்ணா கிராம ஒன்றிய செயலாளர், வி.கே.வெங்கடராமன், அண்ணாகிரமம் ஒன்றிய கழக முன்னாள் செயலாளர், பொதுக் குழு உறுப்பினர் நா.பலராமன் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.*

*மணமக்களை செ.புஷ்பராஜ், கே.ராமு (எ) ராமச்சந்திரன், ஆர்.எஸ்.எம். தணிகைசெல்வம்., கே.ராஜேந்திரன், ஏ.சிவா, பி.குணா (எ) குணசேகரன், வி.திருவேங்கடம், எம். எஸ்.கணேஷ்குமார், பி. மணிவண்ணன்,பி.வி.ஜெயமூர்த்தி, ஆர்.சுந்தர வடிவேல், ஜெயந்தி ராதா கிருஷ்ணன், எஸ்.துரை ராஜ், எம்.ராஜசேகர், சங்கர், இ.மதனகுரு, மா.தா. ஏசுதாஸ், ஜி.கதிர்காமன், ஆர்.டி.ஆர்.பிரபு, நெய்வேலி சதாம், ஏ.ராஜசேகர், பி. புருஷோத்தமன், எஸ். வி.ராமர், எம்.ஆறுமுகம், உமையாள் ஆறுமுகம், ஜி.கே.ஸ்ரீதர், எஸ்.சடாச்சரம், ஏ.கலிலூர்ரஹ்மான், பவை.எழில்செல்வன், டி. ஜெயமூர்த்தி, வி.பி.ராதாகிருஷ்ணன், எஸ்.சதாசிவம், ஆர்.கே.ராகவன், டி. வாசுகி, டி.ஆர்.மனோகர், மகாலட்சுமி வெங்கடேசன், டி. கலியமூர்த்தி, ஜெ. செந்தில்குமார், எம்.முரளி முத்து சாமி, டி.நாராயணன் வாசு.சிவனேசன் D.ஞான வேல் எஸ்.செந்தில்நாதன் பி.கிருஷ்ணராஜ் Dr.ஆர். விஜயசந்திரன் வே.வேணு கோபால்,கே.கனகசபை டி.குமரகுரு ஏ.சம்பத் சு.சாமிநாதன் சித்ரா ராஜ் குமார் ஆறு.கண்ணதாசன் ஆர்.எஸ்.அருள், பிச்சை முத்து எம்.ஜி.ஆர்.விக்கி பாலாஜி ஏ.அழகேசன் சோழவல்லி சபா அனீஷ் ராஜா பி.விமல் அஜித், எம். பி.டி.தியாகராஜன், டி.சதா சிவம், எஸ்..கிருஷ்ண மூர்த்தி, ஓ.எம்.பி.சக்கர பாணி, ஏ.பூபதி, என்.பாண்டியன், ஏ.கருணாநிதி, எஸ். பி.ரஞ்சித், R.லட்சுமி காந்தன், டி.அலெக்ஸ் (எ) தினகரன், எஸ்.சுபாஷ், டி.பாலகிருஷ்ணன் உள்பட மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*ஜெ. ரமேஷ், ஏ. செந்தில், எம்.ராஜதுரை, டி. பிரதாப் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

---

## எ.நாகராசன் தலைமை! கொளத்தூர் மேற்குப் பகுதி மீனவர் அணி துணை அமைப்பாளர்

# எம்.முருகன் - எம்.நாராயணி இல்லத் திருமண விழா: பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ, வாழ்த்துகிறார்!

## பிரியா ராஜன் – கலாநிதி வீராசாமி – இரா.கிரிராஜன் – ப.ரங்கநாதன் பங்கேற்பு!

*சென்னை, ஜூன். 18 -*

*சென்னை கிழக்கு மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் எம்.முருகன் - திருமதி எம். நாராயணி (எ) நளினி இல்லத் திருமண வரவேற்பு விழா (18.06.2026 - வியாழக்கிழமை) மாலை 6.30 மணியளவில், வில்லிவாக்கம், பாபா நகர், டி.கே.சுபமங்களா திருமண மாளிகையில் நடைபெறுகிறது.*

*கொளத்தூர் மேற்கு பகுதி கழகச் செயலாளர் எ.நாகராஜன் எம்.சி தலைமை வகிக்கிறார்.*



*திருமண விழாவில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன் எம்.பி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ரங்கநாதன், கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன், மு.மகேஷ்குமார், கே.சந்துரு, சரிதா மகேஷ்குமார் எம்.சி, தேவஜவகர், எஸ். தனசேகர், த.ஆயிரம், இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, செ.முருகன், எம்.சௌந்தர்ராஜன், என்.ராமச்சந்திரன், எம்.டி.தமிழ்செல்வன், பி.அதிபதி, எம். ஜே.சி.பாபு, எம்.தாவூத்பீ எம்.சி, சி.ஸ்ரீதணி எம்.சி, டி.யோகபிரியா தனசேகர் எம்.சி, பி.அமுதா பொன்னிவளவன் எம்.சி, கே. சாரதா குப்புசாமி எம்.சி, ஆர். ஆரோக்கியதாஸ், அ.கன்னியப்பன், எம்.நாகராஜன், டி.ஏ.ராஜன், ஆர். மோகனசுந்தரம், எஸ்.சம்பத்குமார், ஜெ.சரவணன், என்.ரவிசந்திரன், ஆர். சொக்கலிங்கம், ஏ.எம். ராஜசேகர், ஆர்.ஜெ.வெங்கடரமணமூர்த்தி மற்றும் அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*எம்.நாகராஜ், எம். முத்து, எம்.முருகன், எம். வர்கீஸ் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.*

*65 (அ) வட்டக் கழகச் செயலாளர் என்.பவுல் ராஜ் நன்றி கூறுகிறார்.*

---






பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கழகக் கொள்கை பரப்பு துணை செயலாளர் திண்டுக்கல் ஐ .லியோனி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். இதில் மாநகரச் செயலாளர் எஸ். ஆர். ராஜா, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், மண்டல தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் வே. கருணாநிதி, பகுதி கழகச் செயலாளர்கள் த. ஜெயக்குமார் இ.எஸ். பெர்னார்ட், ஏ. கே. கருணாகரன், மூ.ரஞ்சன், பொன்ராம், கோல்டு டி. பிரகாஷ், எல். பிரபு, கோ. ஜானகிராமன், வனஜா தயாளன், சத்திய பிரபு ஆகியோர் உடன் இருந்தனர்.